மின்னிதழ்
# தேசியம்
THESIYAM
www.thesiyamnews.com
மலர்: 02 | குரல்: 153 | வள்ளுவர் ஆண்டு 2054 | சனிக்கிழமை 17.02.2024 | ப[illegible] 13

Smart Fly
ARUN WINGS
TRAVELS & TOURS
ETA
ARUN WINGS TRAVELS & TOURS (Pvt) Ltd
143, Temple Road, Jaffna. Tel: 076 8472458, 076 6668680
arunwingslanka@gmail.com

## தமிழரசு கட்சிக்கு எதிராக எந்த சூழ்ச்சிகள் வந்தாலும் முறியடிப்போம்!



சி.சிறீதரன் தெரிவிப்பு!



## தமிழரசுக் கட்சியைச் சிதைக்க அரங்கேறும் சதித்திட்டங்கள்!

பதவி ஆசை என்கிறார் சம்பந்தன்



## நிறைவேற்று அதிகாரம் உடைய அரசியலமைப்பு நாட்டின் சாபக்கேடு!

வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ்


## இணையவழி பாதுகாப்பு சட்டத்தை எதிர்த்து மனுத்தாக்கல் செய்துள்ள சுமந்திரன்!



## மக்களின் விருப்பத்திற்கேற்ப அபிவிருத்தி திட்டங்கள் முன்மொழிவு!

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு!



WELLA
WELLA HAIR DRESSING
வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT

No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

தமிழ் பேசும் மக்களின் தேசியப் பத்திரிகை

# தமிழரசுக் கட்சியைச் சிதைக்க அரங்கேறும் சதித்திட்டங்கள்!

## பதவி ஆசை என்கிறார் சம்பந்தன்



நீண்ட வரலாற்றைக் கொண்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சிதைக்கச் சிலர் சதித் திட்டம் தீட்டுவதாக திருகோணமலை மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித் துள்ளார்.

மேலும், பதவி ஆசையில் அவர்கள் இந்தச் சதி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு இது நன்றாகப் புரியும். அவர்களின் சதித் திட்டம் வெற்றியளிக்க நாம் ஒருபோதும் இடமளிக்கமாட்டோம் எனவும் தெரிவித்தார்.
மேலும், தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டுக்கு நீதிமன்றம் தடை விதித்தமை தொடர்பில் சம்பந்தனிடம் தமிழ் ஊடகம் ஒன்று வினவியபோது, நீதிமன்றங்களின் இடைக்காலத் தடை உத்தரவுகள் தொடர்பில் தான் இப்போது கருத்துத் தெரிவிக்க விரும்பவில்லை என்று கூறியதுடன் மேற்படி விடயங்களையும் குறிப்பிட்டார்.
இதேவேளை, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிர்வாகிகள் தெரிவு தொடர்பில் இணக்க அடிப்படையில் எட்டப்பட்ட முடிவுகளை பொதுச் சபை அங்கீகரிக் காதவிடத்து அல்லது அந்தத் தெரிவுகளில் குழப்பங் கள் நிலவுமிடத்து, தேர்தல் முறைமை மூலம் தெரிவுகளை நடத்துங்கள். அன்றைய தினமே மாநாட்டையும் நடத்தி முடியுங்கள் என்றும் கடந்த செவ்வாய்க்கிழமை தன்னைச் சந்தித்த நாடாளு மன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனிடம் சம்பந் தன் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஜே.வி.பி.மற்றும் ஜனநாயகப் போராளிகள் கட்சியினர் யாழில் அரசியல் சந்திப்பு!

தேசிய மக்கள் சக்தியினருக்கும் ஜனநாயகபோராளி கள் கட்சியினருக்குமான சந்திப்பு நேற்று காலை 10.00 மணியளவில் யாழ்பாணம் தேசிய மக்கள் சக்தியின் அலுவலகத்தில் இடம்பெற்றது.
தேசிய மக்கள் சக்தியின் வடமாகாண அமைப்பாளர் ராமலிங்கம் சந்திரசேகரன் அவர்களும் யாழ் இணைப்பாளர் ம.இளங்குமரன் அவர்களும் ஜனநாயகபோராளிகள் சார்பில் தலைவர் சி.வேந் தன் மற்றும் கட்சி உறுப்பினர்களும் கலந்து கொண் டனர். சமகால தேசிய பிராந்திய சர்வதேச அரசியல் நகர்வுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.
குறிப்பாக இலங்கையில் தமிழ் மக்கள் தற்போது அனுபவித்து வருகின்ற அத்துமீறிய நில ஆக்கிர மிப்பு எல்லைதாண்டி மீன் பிடி தமிழர் நில கடல் வளங்கள் அந்தந்த பிரதேச மக்களின் எதிர்பினை யும் தாண்டி வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்கப்படுதல் போன்ற விடயங்களில் தேசிய மக்கள் சக்தியினர் பாராளுமன்றத்திற்குள்ளும் வெளியிலும் குரல் கொடுக்க வேண்டுமென எம்மால் கோரப் பட்டது.
வருகின்ற ஜனாதிபதி தேர்தல் தொடர்பிலும்.
இலங்கையில் புரையோடிப்போயிருக்கும் இனப் பிரச்சினைக்கு தேசிய மக்கள் சக்தியினர் முன்வைக் கப்போகும் தீர்வு திட்டம் தொடர்பிலும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.









# நிறைவேற்று அதிகாரம் உடைய அரசியலமைப்பு நாட்டின் சாபக்கேடு

## வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ்

1978 ஆண்டு இரண்டாம் குடியரசு அரசியலமைப்புடன் கொண்டுவரப்பட்ட நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைதான் இந்த நாடு இவ்வளவு தூரம் பாரிய பின்னடைவை சந்திப்பதற்கு காரணமானது. இந்த உண்மை தேர்தல் காலங்களில் அரசியல் கட்சிகளாலும் ஜனாதிபதி வேட்பாளர்களினாலும் பேசு பொருளாக இருந்தாலும் ஆட்சிக்கு வந்தவுடன் மேலதிக நிறைவேற்று அதிகாரங்களை பலப்படுத்துவதில் ஜயெவர்த்னாவில் கோட்டாபய வரை குறியாக இருந்துள்ளனர்.



இலங்கைத்தீவில் வாழும் சகல இனங்களுக்கும் நியாயமான அதிகாரப்பகிர்வு கிடைப்பதற்கு தடையாக இருப்பது இந்த சர்வ அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை தான் அத்துடன் கடந்த காலத்தில் நாடு பெரும் யுத்த அழிவுகளையும் இனங்களிடையே குரோத எண்ணங்கள் மேலோங்குவதற்கும் இனங்களிடையே சந்தேகங்கள், பயங்கள் ஏற்படுவதற்கும் காரணமானது.

தமிழர்களின் அரசியல் அதிகாரங்கள் இருப்புக்கள் பறிபோவதற்கும் தமிழர்களின் உரிமைப் போராட்டத்திற்கு எதிரான சக்திகளை தமிழர் தரப்புக்குள்ளேயே உருவாக்கி மேலோங்கச் செய்வதில் பக்க பலமாக இருந்தது இருப்பது நிறை வேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையே ஆகும்.

நாட்டில் அதிகார துஸ்பிரையோகம், சுயாதீன ஆணைக்குழுக்கள் சுயாதீனத் தன்மையை இழத்தல் , மாகாணங்கள் ஆளுநர்களால் ஜனாதிபதிமாரின் எண்ணங்களுக்கு ஏற்ப ஆழப்படுதல் , தேசியக் கொள்கைகள் ஆட்சிகள் மாற நிலையான தன்மையை இழத்தல், அயல் உறவுக் கொள்கைகள் மாற்றம் அடைதல் போன்றன நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையால் நாட்டை மிகப் பெரும் பாதிப்புக்கு உள்ளாக்கியதுடன் உள் நாட்டு அரசியல் அமைதியின்மையையும் ஏற்படுத்தியுள்ளது.

ஆகவே நாட்டின் நிரந்தர அமைதிக்கும் நிலையான அபிவிருத்திக்கும் இனங்களியே நல்லிணக்கத்திற்கும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரசியலமைப்பு நீக்கப்பட்டு அதிகாரப் பகிர்வுடன் கூடிய அரசியலமைப்பே அவசியம்.

# தமிழரசு கட்சிக்கு எதிராக எந்த சூழ்ச்சிகள் வந்தாலும் முறியடிப்போம்

## சி.சிறீதரன் தெரிவிப்பு!

தமது கட்சிக்கு எதிராக எந்த சூழ்ச்சிகள், தடைகள் வந்தாலும் மக்களின் ஆத்ம பலத்துடன் அதனை முறியடிப்போம்" என தமிழரசு கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி .சிறீதரன் தெரிவித்துள்ளார்.

தமிழரசு கட்சியின் தேசிய மாநாடு எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெறவிருந்த நிலையில், திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்ட நீதிமன்றங்களில் மாநாட்டுக்கு தடை கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணைகளை அடுத்து , இரு மாவட்ட நீதிமன்றங்களினாலும், மாநாட்டிற்கு இடைக்கால தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

எந்த வழக்கையும் எதிர்கொள்ள நாம் தயார். எமக்கெதிரான சூழ்ச்சிகள் , தடைகளை நாம் மக்களின் ஆத்ம பலத்துடன் முறியடிப்போம். என்னையும் எனது கட்சியையும் குழப்பும், அச்சுறுத்தும் வகையில் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.



இவற்றை கண்டு நாம் அஞ்ச போவதில்லை. என்னை தமது தலைவராக ஏற்றுக்கொண்ட கட்சியையும் எமது மக்களையும் இப்படியான சூழ்ச்சிகளால் முடக்க முடியாது.

எத்தனை வழக்குகள் வந்தாலும் அதனை எதிர்கொள்ள நாம் தயாராகவே உள்ளோம். நீதி நிச்சயம் வெல்லும் " என தெரிவித்துள்ளார்.

# மக்களின் விருப்பத்திற்கேற்ப அபிவிருத்தி திட்டங்கள் முன்மொழிவு!

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு!

சுற்றறிக்கையில் கூறப்பட்டதற்கிணங்க யாழ். மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு பிரதேச செயலகங்கள் ரீதியாக கிராமங்கள் தோறும் கூட்டங்கள் நடத்தப்பட்டு மக்களின் விருப்புக்கேற்ப அபிவிருத்தி திட்டங்கள் முன்மொழியப்பட்டு தெரிவுகள் திரட்டப்பட்டுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

தமது ஒப்புதல் இன்றி 2024ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதற்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் வைத்து அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த மூன்று வருடங்களாக பன்முகப்படுத்தப்பட்ட நிதி மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படாத நிலை இருந்தபோதும் இம்முறை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க யாழ். மாவட்டத்திற்கென 322 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளார்.

ஆனாலும் இந்த நிதி மிக சொற்பமானதாகவே உள்ளது. அதாவது சிறு விடயங்களை மேற்கொள்வதற்கான நிதியாகவே உள்ளது. அதற்கிணங்கவே இம்முறை பிரதேச செயலகங்களால் கிராமங்கள் தோறும் கூட்டங்கள் நடத்தப்பட்டு அப்பிரதேச மக்களின் நேரடி தெரிவுகளாக திட்டங்களும் முன்மொழிவுகளும் திரட்டப்பட்டுள்ளன



என கூறியுள்ளார். இதனிடையே யாழ். மாவட்டத்திற்கான குடிநீர் விநியோகம் தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டது. இவ்விடயம் தொடர்பில் ஆராய்வதற்கென இன்று அமைச்சர் ஜீவன் தொண்டமானும் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்திற்கு வருகை தந்திருந்தார்.

ஆனாலும் குடிநீர் பிரச்சினை, விவசாயத்துக்கான நீர் தொடர்பில் இன்றும் தீர்க்கமான தீர்வு எட்டப்படவில்லை. இதையடுத்து குறித்த விடயம் தொடர்பில் கூட்டத்தில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், கமக்கார அமைப்புகள் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் கொழும்பில் ஒரு கூட்டத்தில் கலந்து கொண்டு உரிய முடிவினை எடுப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

# இணையவழி பாதுகாப்பு சட்டத்தை எதிர்த்து மனுத்தாக்கல் செய்துள்ள சுமந்திரன்!

சிறிலங்கா அரசாங்கத்தின் இணையவழி பாதுகாப்பு சட்டத்தை எதிர்த்து அதிபர் சட்டத்தரணியும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

சிறிலங்காவின் அரசியலமைப்பை மீறும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற சபாநாயகர் அனுமதியளித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிறிலங்கா உயர் நீதிமன்றின் பரிந்துரைகளை உள்ளடக்காது அரசாங்கத்தின் இணையவழி பாதுகாப்பு சட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், சட்டத்தின் விதிகளுக்கேற்ற திருத்தங்களுக்கமைய இந்த சட்டம் தயாரிக்கப்படவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில், குறித்த சட்டத்தை சவாலுக்குட்படுத்தும் வகையில் தான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

சட்டமா அதிபரின் ஆலோசனைக்கமைய சிறிலங்கா நாடாளுமன்றத்தின் சபாநாயகரால் கைச்சாத்திடப்பட்டதாக கூறப்படும் குறித்த சட்டம் செல்லுபடியாகாதது மற்றும் அரசியலமைப்புக்கு எதிரானது என சுமந்திரன் தனது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.



விளம்பர தொடர்புகளுக்கு
Mobile : +94 777 163990

# ஜே.வி.பி.மற்றும் தமிழ்த் தேசியக் கட்சியினர் யாழில் சந்திப்பு!

தேசிய மக்கள் சக்தியின் அழைப்பின் பெயரில் அக்கட்சியின் பிரமுகர் பிமல் ரத்நாயக்கவுடன் தமிழ்த் தேசியக் கட்சியினர் யாழ்ப்பாணத்தில் உள்ள ஜே.வி.பி கட்சி அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை சந்தித்து கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தனர்.

மேலும் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஜே.வி.பியின் நிலைப்பாடு தொடர்பிலும், தமிழ் மக்களின் அபிலாசைகள் தொடர்பாகவும், வடகிழக்கு தமிழ் மக்கள் தொடர்பில் ஜே.வி.பியின் நிலைப்பாடு போன்ற விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் பல முக்கிய அரசியல் விடயங்களை பேசியிருக்கின்றார்கள் என்றும் அறியக்கூடியவாறு உள்ளது.

இச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சிரேஸ்ட சட்டத்தரணி ந.சிறிகாந்தா கட்சியின் கொள்கை பரப்பு செயலாளர் ஜெ. ஜெனார்த்தனன், இளைஞர் அணிச் செயலாளர் பகிரதன் ஆகியோர் கலந்து கொண்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



# தமிழரசு கட்சியின் புதிய தலைவரை நேரில் சந்தித்த அமைச்சர் ஜீவன் தொண்டமான்!

இலங்கை தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக தெரிவாகியிருக்கும் சிவஞானம் சிறீதரனை மரியாதை நிமித்தம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமான் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள சிறீதரனின் இல்லத்தில் இக்கலந்துரையாடல் நேற்று (16.02.2024) காலை இடம்பெற்றுள்ளது. இதன்போது இலங்கை தமிழரசுக்கட்சியின் தலைவராக தெரிவாகியிருக்கும் சிவஞானம் சிறீதரனுக்கு ஜீவன் தொண்டமான் வாழ்த்துகளை தெரிவித்து கொண்டார்.

இதேவேளை இச்சந்திப்பில் நீர் வழங்கல் தொடர்பில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட உள்ள விடயங்கள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.





விளம்பர
தொடர்புகளுக்கு
+94 777 163990

# நிகழ்நிலை பாதுகாப்பு சட்டத்தால் ஊடகவியலாளர்களுக்கு எந்த பாதிப்பும் இல்லை!

## இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தெரிவிப்பு!



நிகழ் நிலைப் பாதுகாப்பு சட்டத்தால் ஊடகவியலாளர்களுக்கு பாதிப்பும் ஏற்படாது என இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

நிகழ் நிலைப் பாதுகாப்பு சட்டத்திற்கு வாக்களித்தது தொடர்பாகவும் இந்த சட்டத்தின் ஊடாக ஊடகவியலாளர்களுக்கு பாதிப்பு ஏற்படும் என வெளியாகும் கருத்துக்கள் தொடர்பாக ஊடகவியலாளரின் கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நிகழ் நிலைச் சட்டத்தில் ஏற்கனவே இருந்த இணையவழி குற்றங்கள் உள்ளிட்ட சரத்துக்களை உள்ளடக்கி இந்த சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால் இந்த நிகழ் நிலைச் சட்டத்தின் ஊடாக உண்மையாக, செயற்படுகின்ற ஊடகவியலாளர்கள், ஊடகங்களின் கருத்துக்கள் மறுக்கப்படக் கூடாது அது பாதுகாக்கப்பட வேண்டும்.

இந்த சட்டம் கொண்டு வரப்பட்டதன் நோக்கம் ஜனநாயகத்திற்கு முரணாக தனி மனித சுதந்திரத்தை அவருடைய கௌரவத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கே இந்த சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த சட்டத்தின் ஊடாக ஊடகவியலாளர்களுக்கு எந்த பாதிப்பும் வராது.

# யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஆரம்பம்!



யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் தற்போது இடம்பெற்று வருகின்றது.

யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று (16.2.2024) மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்று வருகின்றது.

குறித்த கூட்டத்தில் நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன், அங்கஜன் இராமநாதன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

மற்றும் செ.கஜேந்திரன், யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன், வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம், திணைக்களங்களின் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், பொலிஸார், முப்படையினர், சமூகமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டுள்ளனர்..





விளம்பர தொடர்புகளுக்கு +94 777 163990

# மட்டக்களப்பிற்கு அதாவுல்லா வரக்கூடாது என்று சொல்லும் சாணக்கியன் முட்டாளாகும்!

## கிழக்கின் கேடயம் சாணக்கியனுக்கு கண்டனம் !




கிழக்கு மாகாணத்தை பற்றி எதுவுமே தெரியாத இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் சகோதரர் செந்தில் தொண்டமான் அவர்கள் கிழக்கினை ஆளும்போது இம்மாகாணத்தில் பிறந்து அதன் சுதந்திரமான சுவாசத்திற்கு பாடுபட்ட ஒருத்தரை மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கலந்துகொள்ள என்ன தகுதி உள்ளது என்று கேட்க இராசமாணிக்கம் சாணக்கியன் யார்? சாணக்கியனை விடவும் ஏன் இலங்கையில் காணப்படும் முஸ்லிம் தலைவர்களை விடவும் கிழக்கு மாகாணத்தை பற்றி அதிகம் தெரிந்தவர் தேசிய காங்கிரஸின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம். அதாஉல்லா அவர்களே. அவரை பார்த்து மட்டக்களப்பினைப் பற்றி எதுவும் அவருக்கு தெரியாது என்று சாணக்கியன் சொன்னால் அவர் ஒரு முட்டாள் என்று நாங்கள் கூறுவோம் என கிழக்கின் கேடயம் அமைப்பின் சார்பில் அவ்வமைப்பின் தலைவர் எஸ்.எம். சபீஸ் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவராக தேசிய காங்கிரஸின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம். அதாஉல்லா ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டு கடந்த 13ம் திகதி நடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்திற்கு சமூகமளித்துள்ளார். இந்த கூட்டத்தின் பின்னர் தமிழ் தேசிய கூட்டமைப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் அம்மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான இராசமாணிக்கம் சாணக்கியன் மட்டக்களப்பு மாவட்டத்தை பற்றி அறியாத அதாஉல்லா எவ்வாறு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்திற்கு வர முடியும் என கேள்வி எழுப்பியுள்ளார். அதற்கு பதிலளிக்கும் வகையில் கிழக்கின் கேடயம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் எஸ் எம் சபீஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்

அந்த அறிக்கையில் மேலும், தமிழ் மக்களின் தலைமைகள் என்று கூறிக்கொள்ளும் இவர்கள் ஒரு குட்டையில் ஊறிய மட்டைகளே. அவர்கள் எப்போதும் தங்களது மக்கள் மாத்திரமே வாழ வேண்டும் என எண்ணுபவர்களாக மட்டுமே இருக்கிறார்கள். ஆனால் நாங்கள் எல்லா மக்களும் நிம்மதியாகவும், ஒற்றுமையாகவும் சந்தோசமாகவும் வாழ வேண்டும் என்று எண்ணுபவர்கள். முஸ்லிம்களின் அபிமானி போல வேடமிட்டு திருகோணமலை சண்முகா இந்து கல்லூரி விடயத்தில் இரண்டு நாட்களுக்கு பின்னர் எனக்கு எதுவுமே தெரியாது என நடித்த கோழை தான் இந்த சாணக்கியன். இவர் வட-கிழக்கு இணைய வேண்டும் என்றும் அதில் முஸ்லிம்களை அடக்கி ஆள வேண்டும் என்று விரும்புவரும் கூட

இப்படிப்பட்ட எண்ணம் கொண்ட தமிழ் மக்கள் பிரதிநிதிகளின் உருட்டுக்களை நாங்கள் நன்றாக அறிந்தவர்களாக இருக்கிறோம். அதனால்தான் வடகிழக்கு இணைப்பு தொடர்பில் இந்தியாவுக்கு சிறுபான்மை கட்சிகள் இணைத்து அனுப்ப இருந்த கடிதத்தை நாங்கள் முன்னின்று தடுத்து நிறுத்தினோம். பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் மட்டக்களப்பு மாவட்டத்தை பற்றி அறியாத அதாஉல்லா எவ்வாறு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்திற்கு வரமுடியும் என்ற கேள்வியை வாபஸ் பெற்று பகிரங்க மன்னிப்பு கோர

# யாழ் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 20 இந்திய கடற்றொழிலாளர்கள் நிபந்தனைகளுடன் விடுதலை!

நெடுந்தீவுக்கு அண்மித்த கடற்பரப்பில் அத்துமீறி உள்நுழைந்து கடற்றொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் கீழ் கடந்த 03ஆம் திகதி கைது செய்யப்பட்ட 20 இந்திய கடற்றொழிலாளர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றத்தில் நேற்றையதினம்(16)வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே அவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது 5 வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட 18 மாத சிறைத்தண்டனை என்ற நிபந்தனைகளுடன் அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.
மேலும், இரண்டு படகுகளின் ஓட்டுனர்களுக்கும் ஆறு மாத கால சிறைத் தண்டனை வழங்கப்பட்டதுடன், 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

அத்துடன் ஒரு கடற்றொழிலாளர் இரண்டாவது தடவையும் எல்லை தாண்டி வந்ததனால் அவருக்கு ஒரு வருட கால சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

மேலும் விடுதலை செய்யப்பட்ட கடற்றொழிலாளர்கள் சட்டரீதியான நடவடிக்கைகளை நிறைவுற்ற பின்னர் நாட்டிற்கு திருப்பி அனுப்பப்படவுள்ளனர்.



**யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நோயாளர்களின் அசௌகரியங்களை தவிர்க்கும் பொருட்டு டிஜிட்டல் தொடு திரை விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு பகுதிக்கு முன்னால் இன்று மதியம் 2.30 மணிக்கு திறந்துவைக்கப்பட்டது**

**இவ் டிஜிட்டல் தொடுதிரையில் பொதுமக்கள் வைத்தியசாலை தொடர்பான தவல்கள் அனைத்தினையும் பெற்றுக்கொள்ள முடியும். மேலும் இவ் தொடுதிரை வைத்தியசாலையில் ஏழு இடங்களில் காட்சிப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.–**







# கல்முனை கார்மேல் பற்றிமாவில் சிறப்பாக இடம்பெற்ற பொங்கல்விழா!

கிழக்கில் புகழ்பூத்த கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியின் வருடாந்த தைப்பொங்கல் விழா நேற்று(16) வெள்ளிக்கிழமை கல்லூரி அதிபர் அருட் சகோதரர் ச.இ. றெஜினோல்ட் எவ்.எஸ்.ஸி. தலைமையில் சிறப்பாக நடைபெற்றது..

முன்னதாக மாட்டு வண்டி சகிதம் பாரம்பரிய முறைப்படி பொங்கல் விழா சிறப்பாக நடைபெற்றது.
அதிதிகளாக களுவாஞ்சிக்குடி ஆதார வைத்திய சாலையின் மகப்பேறு வைத்திய நிபுணர் டாக்டர் கோ.வசந்தராஜா அம்பாறை நீர்ப்பாசன திணைக்கள பொறியியலாளர் திருமதி புவிராஜினி விஷ்ணுரூபன் உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா , கல்முனை ஹற்றன் நாஷனல் வங்கி முகாமை யாளர் ஏ. நிர்மலகுமார் பற்றியா 125 வது ஆணாடு விழாக்குழு பொருளாளர் எஸ்.சிறிரங்கன் ஆகி யோர் உள்ளிட்ட அதிதிகள் கலந்து கொண்டார்கள்.
அங்கு பற்றியா பழையமாணவர்களானவைத்திய கலாநிதி டாக்டர் வசந்தராஜா பொறியியலாளர் புவிராஜினி ஆகியோர் நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டாரர்கள்.









வி.ரி.சகாதேவராஜா

# கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் வீடுகளை கையளித்தார்!


வி.ரி.சகாதேவராஜா



கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் திருக்கோவில் பிரதேசத்தில் வீடுகளை கையளித் தார்!

திருக்கோவில் பிரதேசத்தில் மீள்குடியேற்ற அமைச் சினால் யுத்தத்தினால் பாதிக்கபட்ட மக்களுக்காக 2023ம் ஆண்டு தெரிவுசெய்யப்பட்ட 26 பயனாளி களுக்கு ரூபா 6 இலட்சம் மற்றும் 10 இலட்சம் பெறுமதியான வீடுகள் வழங்கபட்டன.

அதன் முதல் கட்டமாக மூன்று வீடுகள் கடந்த புதன்கிழமை பிரதேச செயலாளர்.த.கஜேந்திரன் தலைமையில் அவரின் அழைப்பின் பெயரில் நேற்றைய முன்தினம் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மற்றும் பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவ ருமான டி. வீரசிங்க ஆகியோர் திருக்கோவில் பிரதேச செயலகத்திற்கு விஜயம் ஒன்றினை மேற்கொண்டு மூன்று வீடுகளையும் பயனாளிக ளுக்கு கையளித்தார்.

இந் நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் திருமதி.எஸ்.நிருபா நிர்வாக உத்தியோகத்தர் ரி.மோகனராஜா கிராம சேவைக்கு பொறுப்பான நிருவாக உத்தியோகத்தர் என்.கந்தசாமி திட்டத் திற்கான கள உத்தியோகத்தர்கள் ,பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,கிராம உத்தியோ கத்தர்கள்,பயனாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# காங்கேசன்துறை துறைமுகத்திற்கு விஜயம் செய்த இலங்கைக்கான இந்திய தூதுவர்!

இலங்கைக்கான இந்திய தூதுவர் ஸ்ரீ சந்தோஷ் ஜா நேற்றைய தினம் (16.02.2024) யாழ்ப்பாணத் திற்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றினை மேற்கொண்டுள்ளார். இந்த விஜயத்தின் போது யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளையும் அவர் பார்வையிட்டு வருகின்றார். அந்த வகையில் அவர் காங்கேசன்துறை துறைமுகத்தினை பார்வை யிட்டுள்ளார்.

இதன்போது யாழ்ப்பாண இந்திய தூதரகத்தின் துணை தூதுவர் ராகேஷ் நடராஜ் ஜெய பாஸ்கரன் உள்ளிட்ட இந்தியத் துணைத் தூதரகத்தின் குழுவினரும் உடன் இருந்தனர்.





விளம்பர தொடர்புகளுக்கு +94 777 163990

# கிழக்கு பல்கலைக்கழக வளாகத்தில் திரண்ட நூற்றுக்கணக்கான மாணவர்கள்!

மட்டக்களப்பு வந்தாறுமூலை கிழக்கு பல்கலைக் கழக மாணவர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று பிற்பகல் 4.30 மணியளவில் கிழக்கு பல்கலைக்கழக வளாகத்தில் ஒன்று கூடி எதிர்ப்பு போராட்டத்தில் ஈடு பட்டனர்.

மகாபொல புலமைப்பரிசில் கொடுப்பணவை அதி கரிக்க கோரியும், பல்கலைக்கழக விடுதி வசதி இன்மை பிரச்சினைகள், சுகாதார வசதியின்மை, உணவு பிரச்சினைகள் உள்ளிட்ட பல பிரச்சி னைகளை முன்வைத்து இந்த ஆர்ப்பாட்டம் நடை பெற்றது.மேலும் மாணவர்கள் முன்வைத்த கோரிக் கைகளாவன...

01. தற்போது வழங்கப்படும் மகாபொல கொடுப் பனவான 5000 ரூபா அதிகரிக்கப்பட வேண்டும்.

02. புதியதாக இணைந்த முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு கடந்த 6 மாதமாக மகாபொல வழங்கப்படவில்லை.

03. மாணவர்கள் தங்கும் விடுதியில் மருத்துவ வசதி இல்லை , நிரந்தர வைத்தியர் வேண்டும்.

04. இரண்டாம் வருட மாணவர்களுக்கு விடுதி இல்லை, விரைவில் வழங்குவதாக கோரியும் விடுதி வழங்க இழுத்தடிப்பு செய்கின்றமை. உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.












# தரம் 1 மாணவர்களுக்கு சேமிப்பு கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டன.!

யாழ்ப்பாணம் நீர்வேலி அத்தியார் இந்து கல்லூரியில் தரம் ஒன்றில் இணைந்து கொண்ட மாணவர்களுக்கு வங்கியில் சேமிப்பு வைக்கப்பட்டு கணக்கு புத்தககங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

கல்லூரி அதிபர் ஸ்ரீரதி முருகசோதி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் இங்கிலாந்தில் பணிபுரியும் சட்டநிபுணர் பொன்.சிவசுப்பிரமணியம் பிரதம விருந்தினராகவும் கோப்பாய் இலங்கை வங்கியின் முகாமையாளர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டிருந்தனர்.

புதிய கல்வியாண்டில் தரம் ஒன்றில் இணைந்து கொண்ட சுமார் 21 மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை ஊக்குவிக்குமுகமாக பொன்.சிவசுப்பிரமணியம் அவர்கள் தனது சொந்த நிதியில் சேமிப்பு கணக்குகளுக்கான வைப்புக்களை மேற்கொண்டு வங்கிப் புத்தகங்களை வழங்கி வைத்ததோடு இனிவரும் வருடங்களில் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் தரம் ஒன்றில் இணைகின்ற மாணவர்களுக்கு தனது நிதியில் வங்கி சேமிப்புக் கணக்குகள் ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.












உடனடி வேலைவாய்ப்பு

வடக்கு மாகாணம் முழுவதும்
தேசியம் வாராந்த பத்திரிகையை
விநியோகம் செய்வதற்கு ஆண்/ பெண்
இருபாலரும் தேவை

தொடர்புகளுக்கு:
077 716 3990-076 567 3339

# காணி விற்பனைக்கு

## புத்தூர் மட்டுவில்

### பிரதான வீதியில்.

2 பரப்பாக பிரிக்கப்பட்டுள்ளது.

2 பரப்பு - 5,50,000/=

20 அடி பாதையுடன்.

- யாழ் மத்திய பொருளாதார சந்தைக்கு அருகாமையில் காணி அமைந்துள்ளது.
- ஆலையங்கள் மற்றும் வைத்தியசாலை, பாடசாலைகளும் அருகாமையில் உள்ளது.
- நன்னீர் நிலம்,
- மேட்டு நிலம்,
- மின்சார வசதியும் உண்டு.

மேலதிக விபரங்களுக்கு :

**076 10 98 504, 074 26 00 617**

தேசியம் பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.
Whatsapp +94 76 567 3339
No. 27, Kannathiddy Road, Jaffna.Tel : 021 222 7557
SCAN ME

அரச அங்கீகாரம் பெற்ற வடமாகாணத்தின் முதல்தர கனரக வாகனப் பயிற்சிப் பாடசாலை.




# கிருபா லேணர்ஸ்

## කිරුබා ලෑර්නර්ස් KIRUBAA LEARNERS

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி
- மும்மொழிகளிலும். உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறையில் கட்டணங்கள்.
- இரவிலும் வாகனப் பயிற்சிகள்.




**தலைமையகம்**
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
021 222 4353
0777 22 5292

| | | | |
|---|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 | பூநகரி 021 320 1818 |
| ஆவரங்கால் 021 222 6688 | சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 | மன்னார் 023 225 1656 |
| முழங்காவில் 021 300 6544 | கிளிநொச்சி 021 228 5505 | விஸ்வமடு 021 320 1515 | வவுனியா 024 222 7777 |

# SMART TECH SOLUTION





உங்கள் வீடு, அலுவலகம் மற்றும் கம்பனிகளுக்கு CCTV கண்காணிப்பு கமரா சிறந்த முறையில் அமைத்துத்தரப்படும். சிறந்த வாடிக்கையாளர் சேவை அனுபவம் வாய்ந்த தொழில்நுட்பவியலாளர்கள் CCTV installation துறையில் 15 வருட அனுபவம் வாய்ந்த நிறுவனம்.

## Our Services:

CCTV sales & Installation / Alarm system
Door Lock /Finger Print Attendance /Electric Fence / Local Networking / Computer Repair & Maintenance / Software Development



CCTV பொருத்துனர்களுக்கும் விற்பனையாளர்களுக்கும் விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

Contact us for More Information
+94 77 684 3023

+94 71684 3023 / +94 21221 3023
No: 282, Hospital Road, Jaffna.
www.smarttechsolution.lk

தேசியம் பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.

Whatsapp +94 76 567 3339

No. 27, Kannathiddy Road,
Jaffna.Tel : 021 222 7557

SCAN ME